# ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமாத்யாயம்

## ந்யாய வேதாந்த வித்வான் ஸ்ரீ உ.வே. காரப்பங்காடு வேங்கடாசார்ய ஸ்வாமி

ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமாத்யாயம் ஸ்ரீமஹாபாரதம் அநுஶாஸந பர்வத்தில் சேர்ந்த ஒரு பகுதியாகும். இங்ஙனம் இருப்பினும், இந்த அத்யாயம் மஹாபாரதத்தில் ஸாரமாய் இருப்பது என்று ஸ்ரீபராஶரபட்டர் திருவுள்ளம் பற்றியிருக்கிறார். ''மஹாபாரத ஸாரத்வாத்'' என்னும் அம்மஹானுடைய ஸ்ரீஸூக்தி இங்கு அநுஸந்திக்கத்தக்கது. ஸ்ரீமஹாபாரதம் வ்யாஸர் செய்த சிறந்த நூல் என்பது உலகு அறிந்ததே. வ்யாஸர் ஸ்ரீபராஶரருடைய திருக்குமாரர் ஆவார். ''ஸஹோவாச வ்யாஸ பாராஶர்ய:'' என்று வேதத்தினாலேயே போற்றப் பெற்றவர்.

திருமகள் கொழுநனான பரமபுருஷன், ஸம்ஸாரி சேதநருடைய ஆத்மக்ஷேமத்தைத் திருவுள்ளம் பற்றி உபகரித்தருளிய ஜ்ஞாந மார்க்கம், க்ருதயுகத்தில் அங்ஙனமே இருந்தது. த்ரேதாயுகத்தில் சிறிது மாறுபட்டது. த்வாபர யுகத்தில் அழிவுற்றது. அக்காலத்தில் ப்ரஹ்மா முதலிய தேவதைகள் ஸர்வரக்ஷகனாகிய நாராயணனை ஶரணமடைந்தார்கள். அப்பொழுது, பரமன் பராஶரருக்கும் ஸத்யவதிக்கும் குமாரனாய், வ்யாஸராய் திருவவதரித்தான். வ்யாஸர் வேதங்களைக் கண்டு, அவற்றை ருக், யஜுஸ், ஸாம, அதர்வணங்களாக வகுத்து, ஶாகா விபாகங்களையும் செய்தருளினார். அவ்வேதங்களின் பொருளை யாவரும் உள்ளபடி உணருமாறு தன் ஶிஷ்யரான ஜைமினியைக் கொண்டு பூர்வமீமாம்ஸையைச் செய்வித்தும், தான் உத்தரமீமாம்ஸையைச் செய்தும் உபகரித்தார். மேலும், வேதார்த்தத்தைத் தெளிவாகத் தெரிவிக்கும் (உபப்ரும்ஹணமான) பாரதத்தையும் செய்து அருளினார் என்னும் வரலாறு இங்கு அறியத்தக்கது.

ஸம்யங் ந்யாய கலாபேந மஹா பாரதேநச ।
உபப்ரும்ஹித வேதாய நமோ வ்யாஸாய விஷ்ணவே ॥

என்னும் ஶ்ருதப்ரகாஶிகாசார்யர் ஸ்ரீஸூக்தியில் இவ்விஷயத்தை நாம் அறியலாம். இங்ஙனம் சிறப்புற்ற ஸ்ரீமஹாபாரதத்தை நாம் ஒரு புருஷனாகக் கொண்டு நோக்குங்கால், ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமாத்யாமும், ஸ்ரீமத் பகவத்கீதையும் அப்புருஷனுக்கு இரு கண்களாகவே நன்கு புலப்படும். ஆழ்ந்து நோக்கின், ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமாத்யாயம் வலக் கண்ணாகவே தென்படும்.

எம்பெருமானையோ அல்லது அவனுடைய திருக்கல்யாண குணங்கள், ஆஶ்சர்யமான செயல்கள் முதலியனவற்றுள் ஒன்றையோ கூறும் சொல்லைத் திருநாமம் என்பர். இத்திருநாமம் எம்பெருமானைப் போன்று சிறப்புற்றது. எம்பெருமானுக்குப் பல சிறப்புகள் உண்டு.

அச்சிறப்புகளுள் ரக்ஷகத்வமும் போக்யத்வமும் சீரியவையாகும். ரக்ஷகத்வமாவது தன்னைப் பற்றிய சேதநனைத் துன்பம் துடைத்து இன்பமுற்றவனாக ஆக்குதல். இத்தன்மையைப் பின்வரும் சரிதத்தில் ஒருவாறு நாம் அறியலாகும்.

ஸ்ரீராமலக்ஷ்மணர் ருச்யமுகபர்வதத்தின் மேல் விரைந்து ஏறிவருவதை ஸுக்ரீவன் கண்டான். அவன் வீரரஸம் தோன்றுகிற அவர்களது தோற்றத்தைப் பார்த்து ''இவர்கள் வாலியின் பக்ஷத்தைச் சேர்ந்தவர்கள்'' என்று அஞ்சி ஓடி ஒளிந்தான். அக்காலத்தில் சில வாநர வீரர்கள் அவர்களது வடிவு செயல்களைக் கண்டு இவர்கள் வாலியைச் சேர்ந்தவர்கள் அல்லர் என்று ஊஹித்து ஸுக்ரீவனுக்கு அறிவிக்க, ஹநுமான் அஞ்சிய வாநரர்களைத் தேற்றி, ஸ்ரீராமலக்ஷ்மணரை அணுகி ஆலோசித்தார். அங்ஙனம் அணுகி ஆலோசிக்குமிடத்து ஹநுமானுடைய எண்ணத்தைக் கூறுவதாகும் இப்பாசுரம் -

துன்பினைத் துடைத்து மாயத் தொல்வினைதன்னை நீக்கித்
தென்புலத்தன்றி மீளாநெறியுய்க்கும் தேவரோதாம்.

''பிறவித்துன்பங்களைப் போக்கி, அத்துன்பங்கட்கு ஹேதுவான அவித்யையையும் அதன் கார்யமான கர்மத்தையும் ஒழித்து, யமன் உலகத்தில் அல்லாமல், ''நசபுநராவர்த்ததே'' என்னும் எழுதா மறை இயம்புகின்றவாறு, மோக்ஷலோக மார்க்கத்தில் தம்மை அடைந்தவர்களைச் செலுத்துகின்ற ஸ்ரீமஹாவிஷ்ணுதாமோ இவர்கள்'' என்று எண்ணினார் ஹநுமான். இப்பாசுரத்தில் எம்பெருமானுடைய ரக்ஷகத்வம் நன்கு விளங்குகின்றன்றோ? இவ்வாறு எம்பெருமானுடைய ரக்ஷகத்வத்தை ஹநுமானுடைய எண்ணத்தில் இங்குக் கண்டோம்.

இனி, ''போக்யத்வம்'' என்னும் சீரிய சிறப்பைக் காண்போம். போக்யத்வமாவது இனிமையாம். வால்மீகி பகவான், கிஷ்கிந்தா காண்டத்தில் முதலில் ஹநுமாருடைய சரித்தைக் கூறுமிடத்து, ''திருவடி ஸ்ரீராம லக்ஷ்மணரைக் கிட்டி வணங்கி, அவர்களுடைய உண்மை நிலையை உணரும் பொருட்டு பல ஶ்லோகங்களினால் புகழ்ந்து பேசினார்'' என்று அருளிச்செய்திருக்கிறார். அந்த ஶ்லோகங்களுள்,

ஆயதாஶ்ச ஸுவ்ருத்தாஶ்ச பாஹவ: பரிகோபமா:।
ஸர்வ பூஷண பூஷார்ஹா: கிமர்த்தம் நவி பூஷிதா: ॥

என்னும் ஶ்லோகமும் ஒன்று. ஹநுமான் சக்ரவர்த்தித் திருமகனுடைய வடிவழகிலே ஈடுபட்டுப் பேசும் ஶ்லோகம் இது. ''நீண்டவைகளும், உருண்டவைகளும், இரும்புலக்கைகளுக்கு ஒப்பானவைகளும், ஸகல பூஷணங்களாலும் அலங்கரிக்கப்படத் தக்கவைகளுமான திருக்கைகள் ஏன் அலங்கரிக்கப் பெறவில்லை?'' என்பது இதன் பொருள். நம் ஆசார்யர்கள் இந்த ஶ்லோகத்திற்கு அழகான பல கருத்துக்களை அருளிச் செய்திருக்கிறார்கள்.

(1) எம்பெருமான், ஆபரணங்களுக்கும் அழகு கொடுக்கும் பெருமாள் என்று போற்றப்பட்டவன். திருவடி எம்பெருமானுடைய இந்த நிலையைக் கண்கூடாகக் கண்டார். அப்பரமன் ஸந்நிதியிலேயே ''ஆபரணங்களுக்கும் அழகு கொடுக்கும் திருக்கைகள் ஏன் ஆபரணங்களால் அலங்கரிக்கப் பெறவில்லை?'' என்கிறார்.

(2) கண்ணெரிச்சல் வாராதவாறு, இந்த திருக்கைகளின் அழகு மறைக்கத்தக்கது. ''இவை ஏன் மறைக்கப் பெறவில்லை?'' என்கிறார்.

(3) எம்பெருமான் இவ்வுலகில் ஒரொரு ரூபத்துடன் அவதரித்து எழுந்தருளி இருக்குங்கால் தன்னுடைய ஒப்பற்றதும் மிகச் சிறந்ததுமான அழகு, மென்மை, சீலம் முதலிய குணங்களைக் காட்டி, தன்னைக் கண்களால் காண வேண்டாம் என்று இருப்பாரையும் தன் வசத்தில் ஆக்கிக் கொள்பவன். எம்பெருமானுடைய இவ்வியல்பை அறிந்த அறிஞரான திருவடி, ''ஆபரணங்களால் மறைக்கப் பெற்ற அழகே ஸம்ஸாரியான இச்சேதநனை (என்னை) உன் வசத்தில் ஆக்கிக் கொள்ள அமையாதோ? இந்த ஸௌந்தர்ய ப்ரதர்ஶநம் அதிகம்'' என்கிறார். இக்கருத்துக்களைக் காணுங்கால் பகவானுடைய போக்யத்வம் நன்கு விளங்குகின்றன்றோ? இவ்வாறு எம்பெருமானுடைய ரக்ஷகத்வ போக்யத்வங்களைக் கண்டோம். இனி, திருநாமங்களுடையவும் ரக்ஷகத்வ போக்யத்வங்களைக் காண்போம்.

தொண்டரடிப்பொடியாழ்வார் திருமாலை என்னும் திவ்யப்ரபந்தத்தில், முதல் பாசுரத்தில் ரக்ஷகத்வத்தையும் இரண்டாம் பாசுரத்தில் போக்யதையையும் அருளிச்செய்திருக்கிறார். அவ்விரு பாசுரங்கள் -

''காவலிற்புலனைவைத்துக் கலிதன்னைக்கடக்கப்பாய்ந்து
நாவலிட்டுஉழிதருகின்றோம் நமன்தமர்தலைகள்மீதே
மூவுலகுண்டுமிழ்ந்தமுதல்வ! நின்நாமம்கற்ற
ஆவலிப்புடைமைகண்டாய் அரங்கமாநகருளானே!''

''பச்சைமாமலைபோல்மேனி பவளவாய்கமலச்செங்கண்
அச்சுதா! அமரரேறே! ஆயர்தம்கொழுந்தே! என்னும்
இச்சுவைதவிரயான்போய் இந்திரலோகம்ஆளும்
அச்சுவைபெறினும்வேண்டேன் அரங்கமாநகருளானே!''

என்பன. இப்பாசுரங்களுள், முன்னது ரக்ஷகத்வத்தையும், பின்னது போக்யதையையும் தெரிவிக்கின்றன. ''காமம், க்ரோதம் முதலியன நெடுகின காலத்திலும் எலியெலும்பனான இச்சேதனாலே ஜயிக்க முடியாதவை. இங்ஙனமுள்ள இச்சேதநன் பரம புருஷனைக் கிட்டிப் பேரின்பம் பெற உபாயம் யாது?'' என்னும் கேள்வி எழ, ''ஐந்து இந்திரியங்களையும் காவலில்லாமல் கண்டபடி திரியவிட்டு இருப்பினும், எம்பெருமானுடைய திருநாமத்தைக் கற்றதனால் உண்டான கர்வத்தினால் யமவஶ்யதை நீங்கப் பெறலாம், பரமனைப் பெற்று வாழலாம்'' என்கிறார் முதல் பாசுரத்தில்.

''முன்பு யமாதிகள் பேர் கேட்க அஞ்சிக்கிடந்தவர், திருநாமத்தை அண்டை கொண்ட பலத்தாலே யமன் வாசலிலே சென்று அறைகூவுகிறார் இப்போது. வாலி பேர் கேட்க அஞ்சி, சுரமடைந்து கிடந்த மஹாராஜர் பெருமாளை அண்டை கொண்ட பலத்தாலே கிஷ்கிந்தா த்வாரத்திலே சென்று அறைகூவினாற்போலே, அங்கு நாமி பலம். இங்கு நாமபலம்.''

என்னும் பெரியவாச்சான்பிள்ளை ஸ்ரீஸூக்தி இங்கு அநுபவிக்கத்தக்கது. பரமபதம் அளிப்பதாகப் பரமன் அருளிச் செய்தான். அவர் "அச்சுதா! அமரரேறே! ஆயர்தம் கொழுந்தே என்னும்படியான இந்த ரஸத்தை விட்டு, பரமபதம் ஆளும்படியான அந்த ரஸத்தை நீ அளிக்க நான் பெறுவதாயிருப்பினும், அதை விரும்பமாட்டேன்" என்கிறார் இரண்டாம் பாசுரத்தில்.

இக்கருத்துக்களைக் காணுங்கால் எம்பெருமானைப் போன்று, அவன் திருநாமங்களையும் ரக்ஷகத்வ போக்யத்வங்கள் உடையனவாக நாம் நன்கு அறியலாமன்றோ? இவ்வாறு எம்பெருமானுக்கும் திருநாமத்திற்கும் உள்ள ஸாம்யத்தைக் கண்டோம். இனி, எம்பெருமானைக் காட்டிலும் திருநாமம் சீரியது என்பதைக் காண்போம்.

பெரியாழ்வார் திருமகளாரான ஆண்டாள், "ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி" என்று அருளிச்செய்திருப்பது ப்ரஸித்தம். "உத்தமனைப்பாடி" என்றாலே போதுமே, பாடும்போது பேரின்றியும் பாட முடியுமோ? முடியாதன்றோ? என்று சிலருக்கு ஐயம் ஏற்படக்கூடும். இந்த ஐயத்தைப் பரிஹரிக்கும் பெரியவாச்சான் பிள்ளை ஸ்ரீஸூக்தி பின்வருமாறு அமைந்துள்ளது:-

"அவன் தனக்கும் பிறர்க்கும் உண்டானவாசி போரும் அவனுக்கும் திருநாமத்துக்கும், கட்டிப்பொன் போலே அவன். பணிப்பொன் போலே திருநாமம், அவன் தன்னை இல்லை செய்கிறவர்களும் திருநாமங் கொண்டு காரியங்கொள்ள நிற்பர். அதாவது - வ்யாதி பரிஹார்த்தமாகத் திருநாம ஸங்கீர்த்தநத்தை விதித்தால் அப்போதே அதைச் செய்யா நிற்பார்கள். இனி, மாத்ருகாதுகனுக்கும் கை நொந்தால் அம்மே என்ன ப்ராப்தி உண்டாமா போலே, திருநாமம் சொல்லுகைக்கு எல்லார்க்கும் ப்ராப்தி உண்டாயிருக்கும். திருநாமஞ் சொல்லுகைக்கு யோக்யதை ஸம்பாதிக்க வேண்டா இதுதானே யோக்யதையைப் பண்ணிக் கொடுக்கவற்று".

இந்த ஸ்ரீஸூக்தியின் கருத்தைச் சிறிது விரித்துக் கூறுவோம். "உத்தமனைப் பாடி" என்றாலே போதும். ஆனாலும் "உத்தமன் பேர் பாடி" என்றது எம்பெருமானைக் காட்டிலும் அவன் திருநாமத்துக்குண்டான சீர்மையை அறிவிப்பதற்காகவே. மற்றப் பொருள்களைக் காட்டிலும் பகவான் எங்ஙனம் மிகச் சிறப்புடையவனோ, அங்ஙனமே பகவானைக் காட்டிலும் அவன் திருநாமம் மிகவும் சீர்மையுற்றது. தங்கக் கட்டிப் போன்றவன் எம்பெருமான். ஆபரணமாகச் செய்யப்பட்ட பொன் போன்றது அவன் திருநாமம். இதனால் "எம்பெருமானைக் காட்டிலும் அவன் திருநாமத்திற்கு இனிமை அதிகம்" என்பது தெளிவு. "பரலோகம், பரமாத்மா, தர்மம், அதர்மம் இவை உண்டு, ஶாஸ்த்ரம் உண்மையை அறிவிக்கும் சிறந்த ப்ரமாணம்" என்று இருக்கிறவன் ஆஸ்திகன் எனப்படுகிறான். இவன் எம்பெருமானிடம் அன்புடையவனாய் இருப்பவன். "பரலோகம் முதலியவற்றையும், ஶாஸ்த்ரத்தையும் இல்லை செய்கிறவன்" நாஸ்திகன். இவனோ பகவானை அன்புடன் ஆதரிக்காமல் இருப்பினும், வ்யாதி பரிஹாரத்தின் பொருட்டுத் திருநாமஸங்கீர்த்தநத்தைச் செய்யுமாறு தூண்டுங்கால், ஆதரித்துச் செய்வதைக் கண்கூடாகக் காண்கிறோம். இதனால், "எம்பெருமான் ஆஸ்திகனால் ஆதரிக்கப்படுபவன், திருநாமமோ ஆஸ்திக நாஸ்திக விபாகமற எல்லோராலும் ஆதரிக்கப்படுவது" என்பது மிகத் தெளிவன்றோ? மேலும் இங்குப் பலப்ரதத்வத்திலும் (பலனை அளிக்குமதாய் இருக்கையிலும்) எம்பெருமானைக் காட்டிலும் திருநாமத்திற்கு ஏற்றம் உண்டு என்றும் தெளியலாம்.

ஆனால் திருநாமத்தைச் சொல்லுங்கால் அன்புற்றிருந்து சொல்ல வேண்டாவோ? என்னில், தன்னைப் பெற்று வளர்த்த தாயைத் தெய்வமாக வைத்துப் பூஜிக்க வேண்டியிருக்க ஒருவன் அங்ஙனம் நடவாமல் அத்தாயையே தன் கைகளால் ஹிம்ஸிக்க அதனால் கை நொந்தால் 'அம்மே' என்னக் காண்கிறோம் அல்லவா? இதனால் எல்லோருக்கும் திருநாமம் சொல்லத் தகு உண்டு என்பது நன்கு புலப்படுகின்றதன்றோ? இவ்வாறு ஆண்டாள் திவ்யஸூக்தியிலும், அதன் வ்யாக்யாநமான பெரியவாச்சான்பிள்ளை ஸூக்தியிலும் திருநாமப் பெருமையைக் கண்டோம்.

ஸ்ரீபராசரபட்டர், ஶாஸ்த்ரங்களும் பாலர்களும் ஊமையரும் உள்பட யாவரும் பரிக்ரஹித்திருக்கையினால் ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாம அத்யாயத்துக்கு (திருநாமங்களுக்கு) ஏற்றம் உண்டு என்கிறார். ''பரிக்ரஹாதிஶயத:'' என்பது அம்மஹானுடைய ஸ்ரீஸூக்தியாகும்.

ஸ்ரீமஹாபாரதம் ஸபா பர்வத்தில், ''தோவோ நாம ஸஹஸ்ரவாந்'' (38.11) என்னுமிடத்து எம்பெருமானுக்குக்கூட இந்தத் திருநாம ஸம்பந்தத்தைக் கொண்டு ஏற்றம் சொல்லப்பட்டு இருக்கிறது.

சரக ஸம்ஹிதையில் மேஹ ப்ராயச்சித்தம், குஷ்ட ப்ராயச்சித்தம், ஜ்வர ப்ராயச்சித்தம் முதலியனவற்றைச் சொல்லும் இடங்களில் ஸஹஸ்ரநாமத்தைக் கீர்த்தநம் செய்யும்படி கூறியிருப்பதை நாம் அறியலாம்.

கவிகளும் ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமத்தை ஸகல ஜீவ ரக்ஷையாக வர்ணித்திருக்கிறார்கள் என்பதற்கு ''அவிச்சிந்ந பட்யமாந நாராயண நாம ஸஹஸ்ரம்'' என்னும் காதம்பரி வாக்யத்தையும் எடுத்துக்காட்டி இருக்கிறார் பட்டர்.

பரிக்ரஹாதிஶயத்தை உபபாதித்துக் கூறுமிடத்து ஸ்ரீபராஶர பட்டர்,

''லோகேஶ, க்ரஹணதாரண ஶ்ரவண ஜப ஸங்கீர்த்தந லேகந வ்யாக்யாந தந்நிஷ்ட பூஜந ப்ரப்ருதிபி:, விஷபிசாச வ்யாதிக்ரஹது: ஸ்வப்ந துர்நி மித்தாத்ய-ஶிவோபசமநாய, மஹாபாதகாதி ப்ராயச்சித்தாய, ஐஹிக ஆமுஷ்மிக அப்யுதயஸித்தயே, ஸம்ஸாரகற்ரந்தி விஸ்ரம்ஸநாய, வைஷ்ணவ பரமபதாவாப்தயே, தாதாத்விக பகவத்குண ஸுதாஸ்வாத ஸுகாயச ஆபால மூகமூர்க்க ஸ்த்ரீ நாஸ்திகைக பேஷஜம் நிரதிசயஶ்ரத்தாபக்தி விஶ்வாஸ பூர்வகம் பரிக்ருஹ்யதே. ந சைவம்வித: பரிக்ரஹோ வேதாநாமபி, தேஷாம் மூர்க்காதபி: அபரிக்ரஹாத்.''

(உலகத்திலும் இந்த ஸஹஸ்ர நாமத்தை க்ரஹித்தும், தரித்தும், கேட்டும், ஜபித்தும், ஸங்கீர்த்தநம் செய்தும், எழுதியும், வ்யாக்யாநம் செய்தும், இதிலேயே ஊன்றியிருந்தும், பூஜித்தும் மற்றும் அநேக விதங்களால் விஷம், பிசாசம், வியாதி, க்ரஹம், துஸ்வப்நம், துர்நிமித்தம் முதலிய அமங்களங்கள் ஶமிப்பதற்காகவும், ஸ்வர்ணத்தைத் திருடுதல் முதலிய பாதகங்கள் நஶிப்பதற்காகவும், இம்மை மறுமைகளில் போகம் ஸித்திப்பதற்காகவும், ஸம்ஸார பந்தம் தீர்ந்து வைஷ்ணவமான பரமபதம் ஸித்திப்பதற்காகவும், பரமபதம் கிடைத்தபின்பும் எம்பெருமானுடைய குணாம்ருதத்தைப் பானம் செய்வதற்காகவும் இங்ஙனம்

எல்லாவற்றிற்கும் ஒரே மருந்தாய், பாலன் முதல் ஊமையன், மூர்க்கன், ஸ்த்ரீ, நாஸ்திகன் உள்பட யாவராலும் ஶ்ரத்தை பக்தி விஶ்வாஸத்துடன் பரிக்ரஹிக்கப்படுகிறது. இதற்குண்டான பரிக்ரஹாதிஶயம் வேதத்திற்குக் கூட இல்லை. ஏனென்றால், வேதத்தை மூர்க்கர் முதலானோர் பரிக்ரஹிப்பதில்லையன்றோ?

என்று அருளிச்செய்திருக்கிறார்.

இதுகாறும் கூறியவற்றால் எம்பெருமானிலும் திருநாமப் பெருமை நன்கு விளங்குகின்றதன்றோ? இங்ஙனம் திருநாமத்துக்கு, பகவானோடு ஸாம்யத்தையும், அவனைக் காட்டிலும் பெருமையையும் கண்டோம்.

ஸ்ரீமஹாபாரதத்தில் அமைந்துள்ள ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமாத்யாயமும் ஸ்ரீமத் பகவத்கீதையும் அப்பாரதத்திற்கு இரு நயனங்கள் என்றும், அந்நயனங்களுள் ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமாத்யாயம் வலக்கண் என்றும் முன்னம் கூறியிருந்தேன். ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ர நாமாத்யாயம் பகவானுடைய திருநாமங்களையே முக்யமாகக் கொண்டுள்ளது என்பது யாவரும் அறிந்ததே. ஸ்ரீமத் பகவத்கீதையோ எம்பெருமானை முக்ய தர்மமாய்த் தெரிவிக்கிற ஶாஸ்த்ரம் என்பதை "மாமேகம் ஶரணம் வ்ரஜ" என்னுமிடத்தில் நாம் அறியலாகும். இவ்வாக்யத்தில் பகவான் தன்னையே ஶ்ரேயஸ் ஸாதநமாக புத்தி பண்ண வேண்டும் என்னும் ஸாரார்த்தத்தை உபதேஶித்திருக்கிறான். இவற்றை உற்று நோக்கினால், ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ர நாமாத்யாயத்தில் திருநாமம் ஶ்ரேயஸ் ஸாதநம் என்றும் ஸ்ரீமத்பகவத்கீதையில் எம்பெருமான் ஶ்ரேயஸ் ஸாதநம் என்றும் கூறப்பட்டுள்ளதாக நாம் அறியலாகும்.

முன்னம் கூறியவாறு பகவானைக் காட்டிலும் அவன் திருநாமம் சிறப்புடையதாக இருப்பதால், திருநாமத்தை முக்கியமாகக் கொண்டு உள்ள ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமாத்யாயம் வலக்கண் என்று கூறத் தட்டில்லையன்றோ?

ஆக, ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமாத்யாயம் ஸ்ரீமஹாபாரதஸாரம் என்றும் அதனால் மஹிமை யுற்றது என்றும் உரைக்கப்பட்டது.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே ஶரணம்.